செ.வெ.எண்.82 நாள்: 31.08.2017

**திருநெல்வேலி மாவட்டம் நெல்கட்டும்செவலில்**
**விடுதலை போராட்ட வீரர் பூலித்தேவன் பிறந்தநாளையொட்டி அவரது திருவுருவச் சிலைக்கு மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் திரு.ஓ.பன்னீர்செல்வம் அவர்கள் மற்றும் மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் மாலை அணிவித்து மரியாதை செலுத்த உள்ளனர்.**

விடுதலை போராட்ட வீரர் பூலித்தேவன் அவர்களின் பிறந்த நாளை ஒவ்வொரு ஆண்டும் அரசு விழாவாக கொண்டாடுவதற்கு தமிழக அரசு ஆணை பிறப்பித்துள்ளது. அதனடிப்படையில், நாளை (01.09.2017) திருநெல்வேலி மாவட்டம் நெல்கட்டும்செவலில் விடுதலைப் போராட்ட வீரர் பூலித்தேவன் அவர்களின் திருவுருவச் சிலைக்கு, தமிழக அரசின் சார்பில், மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் திரு.ஓ.பன்னீர்செல்வம் அவர்கள், மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர் திரு.கடம்பூர் ராஜீ அவர்கள், மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் திருமதி. வி.எம்.ராஜலெட்சுமி அவர்கள், மாண்புமிகு கதர் மற்றும் கிராமத் தொழில்கள் துறை அமைச்சர் திரு.ஜி.பாஸ்கரன் ஆகியோர் மாலை அணிவித்து மரியாதை செலுத்த உள்ளனர்.

இவ்விழாவில், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், முக்கிய பிரமுகர்கள், அரசு அலுவலர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டு சிறப்பிக்க உள்ளார்கள்.

**வெளியீடு**

செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம்,
திருநெல்வேலி.